**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts Madurai.

Calender : C.C.No. 181/2017

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for Prosecution அ.சா. 1

Defence

Court

Name : சுதா

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 27th August 2019.

முதல் விசாரணை

நான் தற்போது சேடப்பட்டி காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிகிறேன். கடந்த 21.4.2014 ம் தேதி காலை 10.30 மணிக்கு சேடப்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவல் படி நான், தலைமைக்காவலர் 1231 திரு.வாசன் இருவரும் சார்பு ஆய்வாளருக்கு உதவியாக போதைப்பொருள் குற்ற தடுப்பு சம்பந்தமாக பெரியகட்டளை கிராமத்திற்கு மேற்கே உள்ள விருமாண்டி தோட்டம் மோட்டார் ரூம் அருகே பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ஆஜர் எதிரிகள் 1) விருமாண்டி த/பெ போலீஸ் முத்து கழுவத்தேவர், பெரியகட்டளை 2) பிரேம்தாஸ் த/பெ சேகர், பெரியகட்டளை 3) ஈஸ்வரி க/பெ சேகர், பெரியகட்டளை மூவரும் கஞ்சாவை பங்கு போட்டுக்கொண்டிருந்தவர்கள் எங்கள் போலீஸ் பார்ட்டியை கண்டவுடன் ஓட எத்தனித்தவர்களை சுற்றி வளைத்து பிடித்து உங்களை சோதனை செய்ய அருகில் உள்ள நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசு பதிவு பெற்ற வருவாய் துறை அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்யுமாறு

கோர உரிமையுள்ளது என்று கூற அதற்கு எங்களையே சோதனை செய்யுமாறு கூறினர். அதனால் சார்பு ஆய்வாளர் மூவருக்கும் தனித்தனியாக சோதனை சம்மத கடிதம் தயார் செய்து எதிரிகளிடம் கையெழுத்து பெற்றார். அதன்பின்பு 1 வது எதிரி விருமாண்டி என் முன்பாகவும் த.கா. 1231 வாசன் முன்பாகவும் எதிரியிடம் எவ்வித துன்புறுத்தலும் ஆசை வார்த்தைகள் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார். எதிரிகளை சார்பு ஆய்வாளர் சோதனையிட்டு மூவரிடம் இருந்தும் கஞ்சாவை கைப்பற்றினார். நாங்கள் கொண்டு சென்ற தராசு படிக்கல்லை வைத்து நிறுத்துபார்க்க சுமார் இரண்டு கிலோகிராம் கஞ்சா இருந்தது. அதில் சோதனைக்காக 50 கிராம் கஞ்சாவை எடுத்து பிரவுன் கலர் பேப்பரில் மடித்து வெள்ளை நூலால் கட்டி போலீஸ் பட்டன் சீல் வைத்தும் மீதமுள்ள 1.950 கிலோகிராம் கஞ்சாவை மற்றொரு பிரவுன் கலர் பேப்பரில் வைத்து மடித்து வெள்ளை நூலால் கட்டி போலீஸ் பட்டன் சீல் வைத்தும் அந்த இடத்தில் போலீஸ் சாட்சிகளான என் முன்பாகவும் த.கா.1231 திரு.வாசன் முன்பாகவும் அத்தாட்சியில் சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆகும். அதன்பின்பு எதிரிகள் எந்தவித அரசு அனுமதியில்லாமல் போதைப்பொருள் என்னும் கஞ்சாவை வைத்திருந்து குற்றத்திற்காக கைது செய்து நிலையம் கொண்டு வந்து எதிரிகள் மீது சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு நான் உதவியாக இருந்தேன். என்னை சார்பு ஆய்வாளர் விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

சார்பு ஆய்வாளருக்கு தகவல் கிடைத்ததன் பேரில் தான் சம்பவ இடம் போனோம். தகவல் எதன் மூலம் கிடைத்தது என்று எனக்கு தெரியாது. சம்பவ இடம் காவல் நிலையத்தில் இருந்து சுமார் 4 1/2 கிலோமீட்டர் தூரம் இருக்கும். சம்பவ இடத்திற்கு மூன்று இருசக்கர வாகனத்தில் போனோம். நாங்கள் போன இருசக்கர வாகனத்தின் பதிவு எண்களை எனதுவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். பெரியகட்டளை ஊரில் இருந்து ஒரு கிலோமீட்டர் துாரத்தில் 1 ம் எதிரியின் தோட்டம் இருந்தது. அது காட்டு பகுதியாகும். சுமார் 300 மீட்டர் நடந்து போனோம். நாங்கள் போகும் போது கிராம நிர்வாக அலுவலர் அல்லது தலையாரியை அழைத்து செய்ய சார்பு ஆய்வாளர் முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் 1 ம் எதிரியின் தோட்டம் என்பதற்கு உரிய ஆவணங்களை சார்பு ஆய்வாளர் கைப்பற்றினாரா என்றால் இல்லை. காலை 10.30 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து கிளம்பினோம். பெரியகட்டளையில் சுமார் 500 வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். அங்கிருந்த தனிநபர்களை சாட்சிகளாக இருக்க அழைத்தோமா என்றால் இல்லை. தனிநபர்கள் சாட்சிகளாக இருக்க முன்வரவில்லை என்று எனது

வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவர்களது பெயர் முகவரியை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் சாக்கில் இருந்து கஞ்சாவை கீழே கொட்டி இருந்தார்கள். அந்த சாக்கை அத்தாட்சியில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். இந்த விபரத்தை எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சோதனை சம்மத கடிதத்தில் நான் கையொப்பம் போடவில்லை. சம்பவ இடத்தில் அனைத்து ஆவணங்களையும் சார்பு ஆய்வாளர் தான் தயார் செய்தார். சோதனை சம்மத கடிதங்களுக்கும் அத்தாட்சிக்கும் கையெழுத்து வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். எத்தனை மணிக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்யப்பட்டது என்று நேரம் குறிப்பிடவில்லை. அதனை சார்பு ஆய்வாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தாரா என்று எனக்கு தெரியாது. மூன்று சோதனை சம்மத கடிதங்களும் ஒரே நேரத்தில் தயார் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் எதிரிகளின் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் காவல்நிலைய மாதிரி முத்திரை பதிக்கப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியின் நகல் எதிரிகளுக்கு வழங்கப்பட்டதாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சுமார் இரண்டு மணி நேரம் இருந்திருப்போம். எனது வாக்குமூலத்தில் உபகரணங்களை எடுத்து சென்றதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. தலைமைக்காவலர் வாசன் எடைப்போட்டார். எத்தனை முறை எடை போடப்பட்டது என்றுஎனக்கு தெரியாது. த.கா.1231 வாசனின் பட்டன் சீல் வைக்கப்பட்டது. நான் சம்பவ இடமே போகவில்லை என்றும் நான் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் வழக்கு சொத்திற்கும் எதிரிகளுக்கும் தொடர்பு இல்லை என்றாலும் சரியல்ல. சார்பு ஆய்வாளர் பதிவு செய்த பொய் வழக்கிற்கு ஆதரவாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை.